அனுராதபுரம் மாநகர சபை - 2023

---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அனுராதபுரம் மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அனுராதபுரம் மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 3.15 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களினுள் அதன் சட்ட ரீதியான தன்மை, அதன் அதிகாரம் உடைய பிரதேசம், அதன் அதிகாரப் பிரதேசம் அமைந்துள்ள நாடு மற்றம் மாகாணம், அதன் தலைமை அலுவலகத்தின் முகவரி மற்றம் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான விபரமொன்று மற்றம் அதன் பிரதான செயற்பாடுகள் தொடர்பாக குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் சபையின் பொதுவான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எதிர்வரும் நிதியாண்டில் விரிவான விபரங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 2017 இன் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 16.7 ஆம் பந்தியின் பிரகாரம், அறிக்கையிடும் காலப்பகுதிக்காக சபை திட்டமிட்ட பணிகள், அதன் உண்மையான தகவல்கள் மற்றும் முன்னைய காலப்பகுதிக்குரிய அந்த உண்மையான தகவல்களுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது விபரங்கள் சமர்ப்பிக்கப்படும் என்பது. | -மேற்படி- |
| (iii) | நியம இலக்கம் 16.10 இன் பிரகாரம், சேவைச் செயலாற்றலுக்குரிய பகுப்பாய்வு ரீதியான தகவல்கள் பொழிப்பாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டுக்குரிய நிலுவை கழிவுக் கட்டண வருமானம் ரூபா.2,715,100 ஆன போதிலும், மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா.1,172,900 ஆக குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் போது ரூபா.1,497,160 செலவிடப்படடு நிர்மாணிக்கப்பட்டி புபுதுபுர 20 ஆந் குறுக்கு வீதியின் அச்சுக்கல் வீதி மீளாய்வாண்டின் சொத்துக்களாக மற்றும் மூலதன மானியமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில குறிப்பிடப்பட்டுள்ள 34 செயற்திட்டங்களுக்குரிய ரூபா.29,006,795 தொகையான கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதி சொத்துக்களாக மற்றும் மூலதன மானியமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சுனாத ஓய்வு மண்டபத்தின் புதுப்பித்தல் பணிகளுக்காக 2022 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா.8,832,446 செலவிடப்பட்டமை இரு தடவை கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் மூலதனச் சொத்துக்கள் ரூபா.8,832,446 இனால் அதிகரித்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் போது காணி மற்றும் கட்டிடச் சொத்துக்களின் அதிகரிப்பு ரூபா.7,229,059 தொகை வீதி மற்றும் கால்வாய் நிர்மாணத்திற்காக சொத்துக்கள் மற்றும பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் மூலதன் மானியங்களாக கணக்கு வைக்கப்பட்ட 02 செயற்திட்டங்களுக்கு உரிய ரூபா.18,881,977 தொகை மீண்டெழும் வருமானச் செலவினமாக மீளாய்வாண்டின் போது விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | மூலதன மானியங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | மாநகர சபைக்கு உரிய ரூபா.30,093,456 ரொதகையான 14 நிலையான வைப்புக்கள் முதலீடுகளாக காண்பிப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | முதலீடுகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பட்டோலைகளுக்கிடையே நிலுவை வீதவரிகளில ரூபா.889,533 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஒப்பீட்டு அறிக்கைகள் பட்டோலைகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 வருமானச் செலவினம விடயங்களுக்கு மற்றும் 02 சொத்து விடயங்களுக்கு உரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா.105,826,139 ஆக காணப்பட்டதுடன், அதற்குரிய பட்டோலைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா.104,614,196 ஆனமையால் ரூபா.1,211,943 ஆன வேறுபாடு நியலவியது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வீதி நிர்மாணம் | ரூபா. 26,954,750 | (i) மதிப்பீடுகள்<br>(ii) பணி சான்றுபடுத்தல் கோவைகள்<br>(iii) எஞ்சிய மூலப்பொருள் தொடர்பான விபரங்கள் | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உரிய சான்றுபடுத்தும் சான்றுகள் கணக்காய்வு மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் உள்நாட்டு வருமான ஆணையாளரின் 2023 ஏப்ரல் 06 ஆந் திகதிய SEC/2023/E/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபையின் நகர ஆணையாளரின் 2023 ஆம் ஆண்டு உழைக்கும் போது வரி ரூபா.219,162 குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஒட்டுமொத்த வருமானத்தின் பிரகாரம் உழைக்கும் போது வரியினை அறவிடுவதற்கும் நிலுவை பணத்தை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உழைக்கும் போது வரி கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.108,130,062 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.34,570,337 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான வழி** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை** |
| | | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** |
| (i) | வீத வரி மற்றும் வரி | 117,581,041 | 83,406,370 | 105,579,178 | 88,745,511 | 119,962,000 | 78,121,540 | 79,929,199 | 110,918,319 |
| (ii) | வாடகை | 112,317,934 | 108,455,998 | 99,015,753 | 78,496,365 | 82,273,038 | 78,236,585 | 67,730,749 | 69,056,120 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 29,979,000 | 39,056,035 | 36,408,041 | 8,903,373 | 32,413,000 | 29,192,086 | 36,658,002 | 6,255,379 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 160,345,351 | 207,532,842 | 123,003,729 | 112,360,175 | 94,265,600 | 122,695,556 | 119,149,240 | 27,831,062 |
| | | 420,223,326 | 438,451,245 | 364,006,701 | 288,505,424 | 328,913,638 | 308,245,767 | 303,467,190 | 214,060,880 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | 2023 ஆம் ஆண்டுக்காக ரூபா.77,452,555 தொகையான வீத வரி வருமானம் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா.47,388,718 மாத்திரம் அறவிடுப்பட்டிருந்தது. | களத்தின் வீத வரியினை அறவிடுவதற்கு உரிய இலக்கினை தீர்மானித்தல், சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் அரசு நிறுவனங்களுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | நிலுவை வீத வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா.88,745,571 தொகையான வீதவரி நிலுவையை அறவிடுவதற்கு மாநகர சபை கட்டளை சட்டத்தின் 252(i)(அ)பிரிவின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார பிரதேசத்தின் ஆவணங்களை ரத்துச் செய்யும் கட்டளை 926 வெளியிடப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் கருத்தில் கொள்ளக்கூடிய அளவிலான நிலுவைப் பணம் அறவிடுப்பட்டுள்ளது என்பது. | -மேற்படி- |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | 2021 ஆம் ஆண்டுக்கு உரியதாக அறுவிடப்பட வேண்டிய வாகன வாடகை வருமானம் ரூபா.158,160 தொகையானது 2023 ஆம் ஆண்டின் போதும் அறவிடுப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | நிலுவை வாடகை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மாநகர சபைக்கு சொந்தமான 511 கடைகளுக்கு உரியதாக 01 முதல் 08 வருட காலமாக முன் கொண்டு வரப்படும் நிலுவை வாடகை ரூபா.66,719,780 மற்றும் பொதுச் சந்தையின் 210 கடைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா.8,821,505 தொகை 01 முதல் 08 வருட காலமாகவும் அறவிடுப்படாது காணப்பட்டது. | நிலுவை கடை வாடகை அறவிடுவதற்கு இறுதி கட்டளைகள் 28 மற்றும் 20 வதிவிட அறிவிப்புக்கள் மற்றும் 09 பகுப்பாய்வு அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது. | நிலுவை வாடகை அறவிடுப்பட வேண்டும். |
| (iii) | சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியமைக்காக அறவிடுப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா.1,967,718 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுப்பட்டு இருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியமைக்கான நிலுவை வாடகை அறவிடுப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மாநகர சபைக்குச் சொந்தமான காணியை பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கியமைக்கு அறவிடுப்பட வேண்டிய ரூபா.632,025 தொகை அறவிடுப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | அறவீடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வியாபார அனுமதி பத்திர பட்டியல்கள் ரூபா.14,004,410 ஆன போதிலும் அவற்றுள் 1343 வியாபார அனுமதி பத்திரங்களுக்கு உரிய ரூபா.7,194,633 தொகையானது 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வியாபார அனுமதி பத்திர வருமானத்தில் 75 சதவீதம் இதுவரையிலும் அறவிடுப்பட்டுள்ளது என்பது. | அனுமதி பத்திர கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரினதும், ஏனைய உத்தியோகத்தர்களினதும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.1,823,329 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.50,062,750 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் மதிப்பிடப்பட்ட அடிப்படையில் கணக்கிடப்பட்டு முத்திரைக் கட்டணத்திற்கான உறுதிப் பத்திரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | பெறவேண்டிய நீதிமன்ற தண்ட பணம் மற்றும் முத்திரை கட்டணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச்சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை கட்டளை சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் 32 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு உப விதிகள் விதிக்கப்படக் கூடியதாக இருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டில் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை வரைபாக்கி அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை. | மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் உபவிதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைக்கு உரியதாக கடந்த வருடங்களில் ஏற்பட்டிருந்த ரூபா.56,425,174 தொகையான மோசடிகள் மற்றும் இழப்புக்களுக்கு ஒழுக்காற்று விசாரணைகள் மற்றும் உரிய சட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | இதில் உள்ளடங்கியுள்ள 02 விடயங்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை மேற்கொண்டு ஒழுக்காற்று கட்டளை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளமை. | ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்தி அதன் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40(1)(ஆ) பிரிவினை தவறாக புரிதல் கொண்டு பெயர் மாற்ற வருமானத்திற்காக ரூபா.279,500 தொகையான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | ஊக்குவிப்பு படிகளை செலுத்துவதற்கான தேவை ஏற்படாத வகையில் கடமை நேரத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண விளையாட்டுத் திணைக்களத்திற்கு உரிய ரூபா.3,498,179 பெறுமதியான 07 செயற் திட்டங்கள் சபையின் மனித வளம் மற்றும் பௌதிக வளத்தினை பயன்படுத்தி சபையினால் சமூக சபைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபைக்கு எவ்வித நலனையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தச் செயல்திட்டம் உரிய முறையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | சபைக்கு பிரதிபலன் இல்லாத இவ்வாறான பணிகளில் ஈடுபடாதிருக்க பொறுப்புடன் செயல்பட வேண்டும். |
| (இ) | 2023 பொசன் போயா தினத்தை ஒட்டியதாக நடத்தப்பட்ட 2023 புரவர உதானைய நிகழ்ச்சிக்காக அனுராதபுரம் மாநகர சபையின் 416 காணித் துண்டுகளை குத்தகைக்கு வழங்கும் உச்ச வரையறை இல்லாது வியாபார காணிகளை கொள்வனவு செய்வதற்கு இடமளித்த காரணத்தால், 30 வியாபார காணித் துண்டுகள் மற்றும் 20 எனும் படியாக பெற்றுக்கொண்ட | வரையறை இன்றி ஆகக் கூடிய விலை கேள்விக்கு வியாபார காணிகள் வழங்கப்பட்டு உள்ளமை. | பக்கச் சார்பற்ற மற்றும் வெளிப்படை தன்மையுடன் செயப்படுவதற்கும் ஏதேனும் ஒரு தரப்பினருக்கு அநீதி இழைக்கப்படாத வகையில் செயப்படுவதற்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நபர்களால் அந்த காணித் துண்டுகள் இடை குத்தகைக்கு வழங்கப்பட்டு ரூபா 1,847,639 தொகையான அசாதாரண இலாபம் ஈட்டப்பட்டிருந்த போதிலும் இந்த நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2023 புரவர உதானைய நிகழ்ச்சி திட்டம் வருமானம் ஈட்டுவதை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டமையால் வர்த்தக சமூகத்திற்கு, அதிகார பிரதேசத்தின் மக்களுக்கும் சமனானதும் நியாயமானதுமான சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளதாக அந்த திகதிகளில் வியாபார கூடாரங்களை அண்மையதாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது. | இந்த நிகழ்ச்சி திட்டம் வருமானம் உழைப்பதனை நோக்கமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது. | அனைவருக்கும் சமமான சந்தர்ப்பங்கள் ஏற்படும் வகையில் செயல்பட வேண்டும். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முத்திரை கட்டணங்களுக்கு உரிய பதிவேடுகளுக்கு உட்படுத்துதல் மற்றும் கடிதங்களை தயாரித்தல் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு 2018, 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளில் கிடைத்த ரூபா.159,930,267 முத்திரை கட்டண வருமானங்களில் ரூபா 942,037 தொகையான ஊக்குவிப்பு படி கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் 04 பேருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 188(1) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த படிகள் செலுத்தப்பட்டது என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் அந்தப் பணிகளுக்கு நேரடியான பங்களிப்பினை வழங்காத உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தாது இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உரித்து உறுதிகளை பரிசோதிப்பதற்காக இரு உத்தியோகத்தர்கள் முழு நேர அடிப்படையில் நியமிக்கப்பட்டு மாநகர சபையின் நிதியத்தில் இருந்து 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவர்களுக்கு ரூபா.1,956,154 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டுள்ளபோது முத்திரை கட்டண வருமானத்திலும் ஊக்குவிப்பு படியாக ரூபா.1,011,761 செலுத்தப்பட்டிருந்தது. | இந்தப் பணிகள் மேலதிக கடமைகளாக சாட்டப்பட்டுள்ளமை. | சம்பளம் செலுத்தப்படுவதால் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அனுராதபுரம் மாநகர சபைக்குச் சொந்தமான உத்தியோகப்பூர்வ இல்லம் ஒன்றில் இருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகையான ரூபா 11,231,838 தொகையினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடி மேலதிக தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வாடகையினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அனுராதபுரம் மாநகர சபைக்குச் சொந்தமான பயனுள்ள குத்தகைக்கு வழங்கக்கூடிய சுமார் 30.75 ஏக்கர்கள் பரப்பளவான காணி தொடர்பில் குத்தகை உடன்படிக்கையை நாளதுவரையாக்கி உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், நிலுவை பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மார்ச் 19 ஆந் திகதிய ஆம் 01/2018 இலக்கமுடைய திறைசேரி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கமைய பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த வேன் வண்டி ஒன்று மற்றும் பெறுமதியை இனங்கான முடியாத வேன் வண்டியொன்று, கெப் வண்டியொன்று மற்றும் தீக்கிரையான வண்டியொன்றினை கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளரின் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை. | கைத்தவிர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மாநகர சபைக்குச் சொந்தமான குத்தகைக்கு வழங்கக்கூடிய 17 சொத்துக்கள் தொடர்பில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,515,401 தொகை அறவிடுப்பட்டிராததுடன், பணம் செலுத்தாத தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் அந்த சொத்துக்களை சுவீகரித்து வேறு தரப்பினருக்கு குத்தகைக்கு | பணம் செலுத்தாத குத்தகையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு உள்ள சந்தர்ப்பமும் உடன்படிக்கை இல்லாதிருந்த காரணத்தால் சபைக்கு இழக்கப்பட்டு இருந்தது. | | |
| (இ) | பழுதுபார்த்தல் மேற்கொள்ளாத காரணத்தால் 09 வாகனங்கள் செயலிழந்து காணப்பட்டன. | வாகன உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்ளுதல் சிரமமாக உள்ளமையால் அவை கிடைத்தவுடன் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படும். | திறைசேரியின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபை பயன்படுத்தியவாறு காணப்படும் 09 வாகனங்களை சபையின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தின் உரித்து கையகப்படுத்தப்பட்ட பின்னர் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.6 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 புரவர உதானைய நிகழ்ச்சி திட்டத்திற்கான வியாபார காணித் துண்டுகளுக்கு விலை கேள்வி கிடைக்கப்பெற்றாத 36 காணிகள் திறந்த ஏலத்திற்கு உட்படுத்தப்படாது நபர்களுக்கு வழங்கப்பட்டு அனுராதபுரம் மாநகர சபைக்கு ரூபா 2,955,983 வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | வருமானம் ஈட்டுவதனை மாத்திரம் நோக்காகக் கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளதுடன், பொது மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதற்கான முறைப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை என்பது. | பணிகள் வெளிப்படத் தன்மையுடன் மேற்கொள்ளப்படுகின்றன என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 புரவர உதானைய திட்டத்திற்கு வீதியின் இரு மருங்கிலும் மற்றும் விளையாட்டுத் திடல்களில் 05 வாகன தரிப்பிடங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பெறுகை நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | வாகனத் தரிப்பிடங்கள் நகர சபையின் காணியில் இல்லாத காரணத்தால் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராததுடன், எதிர்வரும் வருடங்களில் பெறுகை மேற்கொள்ளப்படும் என்பது. | பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |